செய்தி வெளியீடு எண்: 25 நாள்: 16.02.2018

***தேனி மாவட்டம்,***
***மாவட்ட நிர்வாகம், மாவட்ட நீதித்துறை இணைந்து நடத்தப்படவுள்ள மக்கள் தொடர்பு முகாமிற்கு பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை அளிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்***

********

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தேவதானப்பட்டி உள்வட்டத்திற்குட்பட்ட மேல்மங்கலம் பிட்-1 கிராமத்தில் வருகின்ற (24.02.2018) அன்று காலை 10.30 மணியளவில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட நீதித்துறை இணைந்து நடத்தும் மக்கள் தொடர்பு முகாம் நடைபெறவுள்ளது.

இம்முகாமில், பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளான முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, ஆதரவற்ற விவசாயக்கூலி உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, பட்டா கோருதல், பட்டா மாறுதல், கல்விக்கடன் கோருதல், விலையில்லா தையல் இயந்திரம் கோருதல், காவல்துறை தொடர்பான மனுக்கள் போன்ற அரசின் பல்வேறு நலத்திட்டங்களை கோரி விண்ணப்பிக்கலாம்.

மேலும், இச்சிறப்பு முகாமில் நீதித்துறை தொடர்பான மனுக்களுக்கு தீர்வு காணப்பட உள்ளது. எனவே, இம்முகாமிற்கு முதற்கட்ட மனுக்கள் அனைத்து அரசுத்துறைகளின் சார்பில் எதிர்வருகின்ற 17.02.2018 அன்று மேல்மங்கலம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் காலை 10.00 மணி அளவில் பெறப்படவுள்ளது. தகுதிவாய்ந்த பொதுமக்கள் மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**